

கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், சிவகங்கை மாவட்டம், காரைக்குடி மாநகராட்சிக்குட்பட்ட தனியார் மஹாலில் மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் பணியாற்றி வரும் தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, அவர்கள், காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.மாங்குடி, காரைக்குடி மாநகராட்சி துணை மேயர் ந.குணசேகரன், காரைக்குடி மாநகராட்சி ஆணையாளர் சங்கரன் உட்பட பலர் உள்ளனர்.



முதலமைச்சர் அவர்கள் மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் தூய்மைப் பணியாளர்களுக்கு உணவுத் திட்டம் விரிவாக்கத்தை தொடங்கி வைத்து தூய்மைப் பணியாளர்களுக்கான நலத்திட்ட உதவிகள் வழங்கியதை தொடர்ந்து தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் ஆரப்பாளையம் மேலப்பொன்னகரம் மைய சமையல் கூட வளாகத்தில் மதுரை மாநகராட்சி தூய்மை பணியாளர்களுக்கு 09.02.2026 அன்று உணவுகளை வழங்கினார்கள். அருகில் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கே. ஜே.பிரவீன்குமார், ஆணையாளர் திருமதி.சித்ரா விஜயன், துணை மேயர் நாகராஜன் , மாமன்ற உறுப்பினர் ஜெயராம் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.



தேனி மாவட்டம் வீரபாண்டி கௌமாரி அம்மன் திருக்கோவில் இந்து சமய அறநிலையத் துறை சார்பில் மூத்த தம்பதியர் 50 ஜோடிகளுக்கு மாவட்ட வருவாய் அலுவலர் ராஜகுமார் தலைமையில் சிறப்பு செய்யப்பட்டது. உடன் பேரூராட்சி தலைவர் கீதா சசி, உதவி ஆணையாளர் ஜெயதேவி, செயல் அலுவலர் சுபிதா, பேரூர் செயலாளர் செல்வராஜ் மற்றும் கழக முன்னோடிகள் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



நெல்லை கிழக்கு மாவட்டம் வள்ளியூர் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளராக பணியாற்றிய இரா.கருணாநிதி உடல்நிலை சரியில்லாமல் இயற்கை எய்தினார். அவர்களின் குடும்ப ஏழ்மையை கருத்தில் கொண்டு வள்ளியூர் தெற்கு ஒன்றிய செயலாளர் வள்ளியூர் ஒன்றிய குழு தலைவர் ராஜா ஞானதிரவியம் பரிந்துரைத்ததின் அடிப்படையில், துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க திராவிட முன்னேற்ற கழக இளைஞரணி அறக்கட்டளையிடமிருந்து வந்த உதவி தொகை ரூ.25000க்கான காசோலையை அன்னாரது குடும்பத்தினரிடம் திருநெல்வேலி முன்னாள் எம்பி,தலைமை செயற்குழு உறுப்பினர் சா.ஞானதிரவியம் நேரில் வழங்கினார். நிகழ்வில், ஒன்றிய கவுன்சிலர் ஜெயா,மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் தில்லை ராஜா, மாவட்டப் பிரதிநிதி கருணாநிதி,இசக்கியப்பன், கழக முன்னோடி ராசையா,தொண்டரணி மந்திரம்,கிளை செயலாளர்கள் முருகன்,சமுத்திரபாண்டி, சோமசுந்தரம்,அறிவழகன், அருள்மணி ஆகிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் வட்டம்,குளத்தூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ.வி.மார்கண்டேயன் துவக்கி வைத்து பயனாளிகளுக்கு முகாமின் அட்டை மற்றும் கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கினார். நிகழ்வில் விளாத்திகுளம் கிழக்கு ஒன்றிய செயலாளர் சின்னமாரிமுத்து, தெற்கு ஒன்றிய செயலாளர் இம்மானுவேல், வடக்கு மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் பாண்டியராஜன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க மதுரையில் தென் மண்டல அளவிலான மாபெரும் வாக்குச்சாவடி பாக முகவர்கள் பயிற்சி மாநாடு வரும் 21ஆம் தேதி நடைபெற உள்ளதையொட்டி அதற்கான ஏற்பாடுகள் தொடர்பான மதுரை மாவட்ட திமுக பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் வடக்கு மாவட்ட செயலாளர்–வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நடைபெற்றதில் மண்டல பொறுப்பாளர்– நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன், மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன், வடக்கு மாவட்ட துணை செயலாளர் ஆ.வெங்கடேசன் எம் எல் ஏ ஆகியோர் முன்னிலையில் சிறப்புரை ஆற்றினார். உடன் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தொகுதி பொறுப்பாளர்கள், கழகத்தினர் என பெரும் திரளானோர் பங்கேற்றனர்



இராமநாதபுரத்தில் 09.02.2026 அன்று தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவு திட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம், மாவட்ட ஆட்சித் தலைவர் சிம்ரன் சீத் சிங் காலோன் ஆகியோர் தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு பரிமாறினர். உடன் இராமநாதபுரம் நகர் மன்றத்தலைவர் ஆர்.கே.கார்மேகம், இராமநாதபுரம் நகர் மன்ற துணைத்தலைவர் டி.ஆர்.பிரவீன் தங்கம், இராமநாதபுரம் நகராட்சி ஆணையர் அஜிதாபர்வின் ஆகியோர் உள்ளனர்.



தேனி தெற்கு மாவட்டம் ஆண்டிபட்டி தனியார் திருமண மண்டபத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் தொகை ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டத்தின் கீழ் சமுதாய வளைகாப்பு விழா தேனி மாவட்ட ஆட்சி ரஞ்சித் சிங், ஆண்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் தலைமையில் நடைபெற்றது. உடன் கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜாராம், பேரூர் செயலாளர் சரவணன் மற்றும் கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

### மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் தலைமையில்!

# நெல்லை கிழக்கு மாவட்ட கழக நிர்வாகிகள் சந்திப்பு கூட்டம்!

## கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. பங்கேற்பு!

நெல்லை, பிப்.11-

நெல்லை கிழக்கு மாவட்ட கழக நிர்வாகிகள் சந்திப்பு மற்றும் ஆலோசனைக் கூட்டம் நெல்லை காப்பர் லீப் ஹோட்டலில் நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக துணை பொதுச் செயலாளர் தென் மண்டல பொறுப்பாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி.அவர்கள் பங்கேற்று உரையாற்றினார்.

நெல்லை கிழக்கு மாவட்ட நிர்வாகிகள் சந்திப்பு கூட்டம் திரு நெல்வேலி காப்பர் லீப் ஹோட்டலில் வைத்து நடைபெற்றது.

இந்நிகழ்வில் கழக துணை பொதுச் செயலாளர் தென்மண்டல பொறுப்பாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் பங்கேற்று 2026 சட்டமன்றத் தேர்தல் குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கி உரையாற்றினார்.

நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் சா. ஞானதிரவியம், எஸ்.ஏ.கே. சித்திக், இராதாபுரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் சிவராஜ், மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் விஜிலா சத்யானந்த், மாவட்ட பொறுப்பு குழு உறுப்பினர்கள் ஜார்ஜ் கோசல்,நம்பி,அல்போன்ஸ், முத்துராமலிங்கம், ஆதிபாண்டி, ஹரிகிருஷ்ணன்,சந்திரகலா, அனுராதா,பொதுக்குழு உறுப்பினர் கள் பரமசிவ அய்யப்பன்,கனகராஜ், வளன் அரசு,சாந்தி சுபாஷ்,ஒன்றிய செயலாளர்கள் வி.எஸ்.ஆர். ஜெகதீஸ்,ஜோசப் பெல்சி, போர்வெல் கணேசன், வேலங்குளம் கண்ணன், செல்வகருணாநிதி,ஆர். எஸ் சுடலைக்கண்ணு, ஆரோக்கிய எட்வின்,அலெக்ஸ் அப்பாவு, சுபாஷ் தங்கபாண்டியன்,சேவியர் செல்வராஜா, எரிக் ஜூடு,நகர செயலாளர் மணி சூரியன்,பேரூர் கழக செயலாளர்கள் ஜான் கென்னடி,அயூப்கான், சேதுராமலிங்கம்,வானுவாமலை, கசமுத்து,முருகையா, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜான் ரபீந்தர்,மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் கேசவன்,மாவட்ட சிறுபான்மையினர் அணி அமைப்பாளர் திருப்பதி ஜெயசீலன், உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

## தலைமைக் கழக அறிவிப்பு

தேனி வடக்கு மாவட்டம், தேனி தெற்கு ஒன்றியம், வீரபாண்டி பேரூரைச் சேர்ந்த எஸ்.பி.சாந்தகுமார், தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப் பட்டுள்ளார்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை- 600 018.
நாள்: 10.02.2026.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.